# MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 18.01.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
| --- | --- | --- |
| 174 | **பொருள் எண்.1**<br><br>தமிழ்நாடு அரசுப்பணியாளர்களுக்கான திருத்திய ஊதிய நிர்ணயம் 2017 தொடர்பான கீழ்க்கண்ட அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1) அரசாணை எண். 303 நிதித்துறை நாள்.11.10.2017<br>2) அரசாணை எண். 304 நிதித்துறை நாள்.13.10.2017<br>3) அரசாணை எண். 305 நிதித்துறை நாள்.13.10.2017<br>4) அரசாணை எண். 306 நிதித்துறை நாள்.13.10.2017<br>5) அரசாணை எண். 307 நிதித்துறை நாள்.13.10.2017<br>6) அரசாணை எண். 311 நிதித்துறை நாள்.23.10.2017<br>7) அரசாணை எண். 314 நிதித்துறை நாள்.25.10.2017<br><br>அலுவலகக்குறிப்பு<br>பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.2846/2017/சி1 | பதிவு செய்யப்பட்டது. |
| 175 | **பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 9 இடங்களில் உள்ள நீர்தேக்க தொட்டிகளை கழுவி சுத்ததம் செய்ய நவீன முறையில் அலுமினியம் படிகட்டுகள் அமைக்க ரூ.1.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்கண்ட பணிகளை குடிநீர் விநியோகம் சுத்தமான முறையில் வழங்கவும், பொதுமக்கள் நலன்கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ஆ) குடிநீர் விநியோகம் தடையின்றி சுத்தமாக வழங்கவும், பொதுமக்கள் நலன்கருதி குறைந்த விலைப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ) மேற்கண்ட பணிகளை செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்த மேலூர் JM வெல்டிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணிகளை செய்ய ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.செல்வமுருகன் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(அ), (ஆ), (இ) அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3105/2017/இ1 | |
| 176 | **பொருள் எண்.3**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டுகளிலும் வீடுதோறும் குப்பைகளை பிரித்து சேகரம் செய்வதற்குத் தேவையான மூன்று சக்கர வண்டிகள் பழுது அடைந்து பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எதிர்வரும் 01.01.2018 முதல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை தீவிரமாக முழுஅளவில் செயல்படுத்தப்பட உள்ளதால் மேற்படி மூன்று சக்கர வண்டிகளை அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக பழுது நீக்கம் செய்து கொள்வதற்கான செலவினம் தோராயமாக ரூ.2.00இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.3228/2017/எச்1) | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 177 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN59AZ 3449 டம்பர் பிளேசர் லாரியில் பிரேக் வேக்யூம் பழுதடைந்து உள்ளதால் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. மேற்படி வாகனம் குப்பைகள் அகற்றுவதற்கு அவசியமாக தேவையாக உள்ளதால் உள்ளூர் நிறுவனங்களில்விலைப்புள்ளி பெற்று பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரத்திற்கு) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3230/2017/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 178 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சியில் புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய மேலூர், திருமதி.பி.அமுதா கபெ பொன்னுச்சாமி என்பவர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி நபரின் விண்ணப்பத்தில் மனுதாரர் பெயரில் உள்ள சொத்துமதிப்பு சான்று நாளது தேதி வரையும், மேற்படி சொத்தில் யாதொரு வில்லங்கமுமில்லை என்ற சான்று, வருமான வரி சான்று படிவம் 16, ஆகியவை இணைக்கப்பட்டுள்ளதால் மேற்படி சொத்துமதிப்பின் அடிப்படையில் திருமதி.பி.அமுதா க/பெ பொன்னுச்சாமி என்பவரை இந்நகராட்சி மூன்றாம் நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3053/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 179 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அள்ளுதல், சாக்கடை சுத்தம் செய்தல், மண் மேடுகள் அப்புறப்படுத்துதல் மற்றும் முட்புதர்களை அகற்றுதல் போன்ற சுகாதார பணிகளை செய்வதற்கு தற்போது தளவாட பொருட்கள் இருப்பு இல்லாததால் பொது சுகாதாரப்பணி பாதிப்படைகிறது எனவே . கீழ்க்கண்ட விபரப்படி தளவாட பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.1,30,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>1. குந்தாணி – 60 எண்ணம்<br>2. சாக்கடை கரண்டி – 50 எண்ணம்<br>3. குப்பைஅள்ளும் ஊசி – 50 எண்ணம்<br>4. மண்வெட்டி(கைப்பிடி இரும்பு) – 15 எண்ணம்<br>5. கடப்பாறை – 4 எண்ணம்<br>6. கூட்டுமார் – 50 எண்ணம்<br>7. மண்தள்ளும் பிரஸ் – 25 எண்ணம்<br>8. அரிவாள் – 8 எண்ணம்<br>9. வாவ்அரிவாள் 4 எண்ணம்<br>10. தென்னைமார் – 60 எண்ணம்<br>11. கூட்டுமாப்பு – 5 எண்ணம்<br><br>அலுவலகக்குறிப்பு<br>மேற்கண்ட பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கி கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 180 | **பொருள் எண்.7**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.38984/2014/பி1 நாள்.14.09.2017ன்படியும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும் 15.09.2017 முதல் 02.10.2017 முடிய "தூய்மையே சேவை" என்ற தலைப்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தூய்மைப் பணிகள் நடைபெற்றதை போட்டோ மற்றும் வீடியோ பதிவு செய்து அறிக்கைள் அனுப்பி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போட்டோ, வீடியோ எடுத்து பிரிண்ட் போட்டு கொடுத்தமைக்காக ராஜா நிலா டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோஸ் நிறுவனத்திற்கு ரூ.20600 பட்டியல் தொகை வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.225/2015/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 181 | **பொருள் எண்.8**<br><br>இந்நகராட்சி பகுதிகளில் கொசுக்களால் பரவும் நோய்கள் பரவுவதை தடுக்கும் நடவடிக்கையாக கொசு உற்பத்தி இடங்களைக் கண்டறிந்து அவற்றை அழிக்கவும், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் 40 DBC பணியாளர்கள் பொதுசுகாதாரத்துறையின் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். நகர்மன்ற தீர்மான எண். 135 நாள். 05.10.2017 ன்படி 01.10.2017 முதல் 31.12.2017 முடிய உள்ள மூன்று மாதங்களுக்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது கொசுப்புழுக்களின் உற்பத்தி கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. தொடர்ந்து கொசுக்களின் உற்பத்தியை கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் பொருட்டு DBC பணியாளர்கள்ளின் பணியினை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.01.2018 முதல் 31.03.2018 முடிய நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 7.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.1886/2017/எச்1) | |
| 182 | **பொருள் எண்9**<br><br>இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18ம் ஆண்டுக்கு பரிந்துரையின்படி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகிலிருந்து வார்டு 24 மற்றும் 25 கருத்தபுளியம்பட்டிக்கு குடிநீர் பைப் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.4.25 இலட்சம் மதிப்பீட்டிற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1.திரு.வி.பாலாண்டி ஒப்பந்ததாரர் 8.5 %குறைவு<br>2. திரு.எஸ்.முத்துவேல் ஒப்பந்ததாரர் 7.89% குறைவு<br>3. திருமதி.பி.அமுதா, ஒப்பந்ததாரர் 10.90 % குறைவு<br>4. திரு.எம். இளையராஜா, ஒப்பந்ததாரர் 12.14% குறைவு<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் வ.எண்.4ல் கண்ட ஒப்பந்தாரர் திரு.எம்.இளையராஜா என்பவர் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு ரூ.12.14 குறைவாக கொடுத்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ஆ) குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.எம்.இளையராஜா என்பவருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.2320/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 183 | **பொருள் எண்.10**<br>மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.பி.பெரியபுள்ளான் (எ) செல்வம் அவர்கள் அலுவலக பணிகளை மேற்கொள்ள நகராட்சி அலுவவகத்தில் அறை ஒதுக்கி தர கோரியதை தொடர்ந்து தற்பொழுது உள்ள ஆணையாளர் அறை மற்றும் பொறியாளர் அறையினை சிறப்பு மராமத்து மற்றும மேம்பாடு செய்ய திட்ட மதிப்பீடு ரூ.50000/– ஆயிரத்திற்கு மன்றத்திதன் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.50000/– ஆயிரத்திற்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிகளை அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>இ) மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.34/2018/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 184 | **பொருள் எண்.11**<br>இந்நகராட்சியில் காவிரி கூட்டுகுடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் திட்டம் மூலம் குடிநீர் விநியோக பிரதான பகிர்மான குழாய் பழுதுபணியினை மேற்கொளள் 2017–2018 ஆம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.3053/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 185 | **பொருள் எண்.12**<br>இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் உள்ளூர் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் மின்மோட்டார்கள்/ போல்போர்டு/கேபிள் உதிரிபாகங்கள் மற்றும் அடிகுழாய் மராமத்து பணிகள் 2017–2018 வருடாந்திர பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.3052/2017/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 186 | **பொருள் எண்.13**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை கட்டிட வணிக வளாகம், வாரச்சந்தை வசூல் மையம் மற்றும் ஆரம்ப சுகாதார மையம் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.1.10இலட்சம் மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.979/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 187 | **பொருள் எண்.14**<br>இந்நகராட்சியின் கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் சேதமடைந்து, போக்குவரத்து மற்றும் சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளதால்அப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும சிறுபாலங்களை பழுதுநீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட ரூ.4.10இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1.வார்டு எண்.3, கம்பர் தெரு/பர்மா காலனி<br>2. வார்டு எண்.10, சொக்கம்பட்டி<br>3.வார்டு எண்.17, கடலைக்காரத் தெரு<br>4. சிவகங்கை சாலை<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட இடங்களில் பணிகளை மேற்கொள்ள தயார்செ சய்யப்பட்ட ரூ.4.10இலட்சத்திற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.3054/2017/இ1) | |
| 188 | **பொருள் எண்.15**<br><br>இந்நகராட்சியில் உள்ள உள்ளூர் ஆழ்துளை கிணறு மூலம் மேல்நிலைத் தொட்டிக.ல் குடிநீர் ஏற்றம் செய்து வரும் 10 இடங்களில் எலக்ரோகுளோரினேட்டர் மூலம் குளோரினேசம் பணி மேற்கொள்ள ரூ.6.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட பணிக்கு 05.01.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>1. திரு.ஆதவன் டிரேடர்ஸ் முத்தூர் — மதிப்பீட்டுத்தொகை ரூ.6.20இலட்சத்திற்கு 0.01 %குறைவு<br>2. திரு.செந்தில்முருகன்& கோ ஈரோடு — மதிப்பீட்டுத்தொகை ரூ.6.20இலட்சத்திற்கு 0.05 %அதிகம்<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டுத் தொகை ரூ.6.20 இலட்சத்திற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த முத்தூர், ஆதவன் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணியின் அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3155/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 189 | **பொருள் எண்.16**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தையில் உள்ள மிகவு பழுதடைந்த கடைகளை இடித்துவிட்டு புதிய கடைகள் கட்டி தர வேண்டி மதுரை, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.<br><br>மேலும் மேற்படி சந்தையில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து விட்டு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கடைகள் கட்ட ரூ.300.00 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>மேற்படி கருத்துரு உரிய அனுமதி பெறும் வரை தினசரி சந்தையில் உள்ள மிகவும் பழுதடைந்த கடைகளை தற்காலிக பழுதுநீக்கம் செய்ய ரூ.5,00,000 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்படி சந்தையில் உள்ள கடைகளை தற்காலிக பழுதுநீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட ரூ.5,00,000 இலட்சத்திற்கான மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொதுமக்களின் நலன்கருதி மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ) மேற்கண்ட பணிகளுக்காக ஆகும் செலவினத்தை பொதுநிதியிலி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.72/2018/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 190 | **பொருள் எண்.17**<br><br>மேலூர் நகராட்சியில் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்கள் அனுப்புவதற்கு 2017–18ம் ஆண்டுக்கு வில்லைகள், அஞ்சல் அலுவலகத்தில் இருந்து வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.63/2010/டி2 | |
| 191 | **பொருள் எண்.18**<br><br>மேலூர் நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக தேவையான தினமலர், தினதந்தி, தினகரன், மாலைமுரசு, தினசரி நாளிதழ்கள் 2017–18 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1295/2006/டி2 | அனுமதிக்கப்பட்டது |
| 192 | **பொருள் எண்.19**<br><br>இந்நகராட்சிக்கு கட்டிட வரைபட அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு கட்டிட வரைபடம் தயார் செய்து வழங்க கட்டிட வரைவாளராக பதிவு செய்ய கோரி திருமதி.பி.கார்த்திகா B.E., என்பவர் விண்ணப்பம் வழங்கியுள்ளார். மேற்கண்ட விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மேற்கண்ட விண்ணப்பதாரர் கட்டடவியல் பொறியியல் பட்டம் பெற்றுள்ளார். எனவே மேற்கண்ட விண்ணப்பதாரரை இந்நகராட்சியில் கட்டிட வரைவாளராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 193 | **பொருள் எண்.20**<br><br>இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018ஆம் ஆண்டு பரிந்துரை செய்யப்பட்ட ரூ.7.00இலட்சம் மதிப்பீட்டிற்கான வார்டு 27 முருகன் கோவில் அருகில் மேல்நிலைத் தொட்டி அருகிலுள்ள காலியிடத்தில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1. திருமதி.பி.அமுதா க/பெ பொன்னுச்சாமி ஒப்பந்ததாரர் 10.06 % குறைவு<br>2. திரு.எஸ்.முத்துவேல், ஒப்பந்ததாரர் 17.16% குறைவு<br>3. திரு.வி.பாலாண்டி , ஒப்பந்ததாரர் 12.00% குறைவு<br>4. திரு.எம்.இளையராஜா, ஒப்பந்ததாரர் 19.93% குறைவு<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பு நோக்கியதில் வ.எண்.4ல் ஒப்பந்தகாரர் திரு.எம்.இளையராஜா என்பவர் மதிப்பீட்டு தொகைக்கு 19.93 % குறைவாக கொடுத்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் திரு.எம்.இளையராஜா என்பவருக்கு பணிஉத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2320/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 194 | **பொருள் எண்.21**<br><br>மேலூர் நகராட்சியில் காலம் கடந்த வைப்புத்தொகையாக 1997–1998 முதல் 2012–2013 ம் ஆண்டு வரை உள்ள தொகை ரூ.3779910/– கணக்கு தலைப்பு எண்.1074ல் ஆண்டுக் கணக்கில் காலங்கடந்த நிதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேற்படி காலங்களில் உள்ள வைப்புத்தொகை செலுத்திய கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களால் மேற்கொண்ட ஒப்பந்தப்பணிகளில் தணிக்கை தடைகள் ஏதும் இல்லாமையினால் ஒப்பந்தப்பணிகளுக்கு செலுத்திய வைப்புத்தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்த வைப்புத்தொகையை திரும்ப வழங்க கோரியது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. திரு.எஸ்.முத்துவேல் ரூ.105172<br>2. திரு.எஸ்.வி.கதிரேசன் ரூ.108530<br>3. திரு.பி.தவபாண்டி ரூ.16600<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2773/2017/டி2 | |
| 195 | **பொருள் எண்.22**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வண்டி எண்.TN59 BX1362 டம்பர் பின் வாகனத்திற்கு நடப்பாண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிசான்று பெறுவதற்கு தகுதிச்சான்று கட்டணம், சேவைக்கட்டணம், பசுமை வரி, வாகன புகைச்சான்று ஆகியன பெறுவதற்கும் மற்றும் Delimitation map மற்றும் Xerox எடுத்த வகைக்கு ஆகும் ரூ.3850க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |